
# சைவ நெறி

# 3

S. Nilothaman 3B





S. Nilothaman
Gd 3B
Jaffna College.

# சைவநெறி

## தரம் 3

## பாடநூல்

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 1999
இரண்டாம் பதிப்பு - 2000
மூன்றாம் பதிப்பு - 2001
நான்காம் பதிப்பு - 2002
ஐந்தாம் பதிப்பு - 2004
ஆறாம் பதிப்பு - 2005
ஏழாம் பதிப்பு - 2006
எட்டாம் பதிப்பு - 2007

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

2008/ஒ/3/30/48,350

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழு மில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல – அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு

# முன்னுரை

இந்நூல் 2008 ஆம் ஆண்டுக்கான தரம் 3 இன் சைவ நெறி எனும் பாடத்திட்டத்தினை ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்பட்டதாகும். வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்கும், சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் மாணவர்களிற்கிடையே தேர்ச்சிகளையும் திறன்களையும் விருத்தி செய்ய முனைவது இந்நூலாக்கத்தின் அடிப்படையான இலக்காகும்.

1999 ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்த தரம் 3 இன் சைவ நெறி எனும் நூல் 2008 ஆம் ஆண்டிற்காக மறுபதிப்புச் செய்யப்படுகின்றது. இப்பதிப்பிற்கு ஒத்துழைப்பு நல்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் ஏனையோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகும்.

இந்நூலின் தரவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட முன்மொழிவுகள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

என். தர்மசேன,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய,
பத்தரமுல்லை.
2007.04.12



2. S.P.C. - 070350

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தரம் மூன்றிற்கான சைவநெறிப் பாடநூல் எமது நாட்டின் கல்வி சீர்திருத்தங் களினதும் மீளமைத்தலினதும் முக்கியமானதோர் அம்சமாகும். இலங்கையின், ஒவ்வொரு பிள்ளையும் தேசாபிமானமுள்ள, சமாதானத்தை விரும்பும் தேர்ச்சிமிக்க பிள்ளையாக வளர்வதற்கான உறுதியான அத்திவாரத்தை வழங்கும் பெரும் வலியுறுத்தல் ஆரம்பக்கல்வியின் மீது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடநூல் பிள்ளையின் கவனத்தை ஈர்த்து அவதானத்தை நிலை நிறுத்தும் அதே வேளையில் பிள்ளையின் க்வனத்தைத் கலைக்கும் வேறு பலமான செல்வாக்குகள் நிலவும் தற்கால உலகிற்கு அத்தியாவசியமான அறிவை வழங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. பெற்றோரும் ஆசிரியர்களும் இப்பாடநூலிற்கு உரித்தான முக்கியத்துவத்தையும், கௌரவத்தையும் வழங்குவார்கள் என நம்புகிறோம்.

இப்பாடநூலைத் தயாரித்தல், தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித் துறையின் ஆளணிக் குழுவொன்றினால் மிகக் கவனத்துடனும் அர்ப்பணிப்புடனும் கலாநிதி ஜீ. எல். எஸ். நாணயக்கார அவர்களின் திறமையான தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இப்பாரிய தேசிய தேவைக்கான அவர்களது முயற்சியை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

*பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க,*
பணிப்பாளர் நாயகம்.

தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.
*1999. 09. 10*

# அறிமுகம்

இலங்கை கல்விச் சேவை ஆணைக்குழுவின் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் சமயக்கல்வி முக்கிய இடம் பெறுகின்றது. அச்சீர்திருத்தங்களுக்கு அமைவாக தரம் 3 சைவ நெறி நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூல் சமயத் தகவல்களை வழங்கும் ஒரு நூலாக அமையாது. மாணவர்கள் சமயப் பழக்கவழக்கங்களை எய்தவும், தேர்ச்சிகளை அடையவும் வழிவகுக்கும் ஒரு நூலாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலை ஆக்குவதில் அயராதுழைத்த எழுத்தாளர்கள், பரிசீலனை செய்தோர் சித்திரங்கள் வரைந்தோர், அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி ஜீ. எல். எஸ். நாணயக்கார.**
பணிப்பாளர் ஆரம்பக்கல்வித்துறை.

தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.
*1999. 09. 10*

| | | |
|---|---|---|
| பணிப்பு | : | பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க<br>பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| மேற்பார்வை | : | கலாநிதி ஜீ. எல். எஸ். நாணயக்கார<br>பணிப்பாளர் ஆரம்பக்கல்வி,<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>விமல் சியம்பலகொட<br>பணிப்பாளர் ஆரம்பக்கல்வி,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| நூலாக்கக் குழு | : | பூ. சுப்பிரமணியம்<br>உ. நவரட்ணம்<br>வ. விஜயலட்சுமி<br>சி. புவனேஸ்வரன்<br>க. இராமலிங்கம்<br>எஸ். வேலாயுதம்<br>கோ. விஜித்தா<br>வே. உமாமகேஸ்வரன் |
| ஆலோசனைக் குழு | : | சுவாமி ஆத்மனானந்தஜி<br>ந. சிதம்பரநாதன்<br>பி. எஸ். சர்மா |
| ஓவியம் | : | எஸ். ராமச்சந்திரன் (சந்ரா) |
| கணினி எழுத்தமைப்பு | | கமலவேணி கந்தையா |
| பதிப்பாசிரியர்கள் | | சி. புவனேஸ்வரன்<br>பூ. சுப்பிரமணியம்<br>வி. என். எஸ். உதயசந்திரன் |

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இறைவனை வணங்குவோம் | 01 |
| 2. | எமது பெற்றோர் | 05 |
| 3. | ஆலய வழிபாடு | 06 |
| 4. | காலைப் பிரார்த்தனை | 07 |
| 5. | தீட்சை பெறுவோம் | 08 |
| 6. | சுவாமி அறை | 09 |
| 7. | பொல்லாப் பிள்ளையார் | 10 |
| 8. | சூரசங்காரம் | 12 |
| 9. | நிறைகுடம் | 14 |
| 10. | செங்கட்டிகள் பொன்கட்டிகளாயின | 15 |
| 11. | கூட்டுப்பிரார்த்தனை | 17 |
| 12. | திருநீற்றின் மகிமை | 19 |
| 13. | திருக்கோணேச்சரம் | 21 |
| 14. | சரஸ்வதி பூசை | 23 |
| 15. | கண்ணன் எங்கள் கண்ணனாம் | 25 |
| 16. | திருநாவுக்கரசர் | 27 |
| 17. | சைவசமயப் பண்பாட்டுக் கருமங்கள் | 29 |
| 18. | கூடி வாழ்தல் | 33 |
| 19. | பொறுமையைக் கடைப்பிடித்தல் | 35 |
| 20. | முதலை வாய்ப்பிள்ளையை மீட்ட கதை | 37 |
| 21. | ஆலயத் தொண்டுகள் | 39 |
| 22. | மகிழ்ச்சியாக வாழ்வோம் | 42 |
| 23. | ஔவையார் அருளிய மூதுரை | 44 |

# இறைவனை வணங்குவோம்.

உலகைப் படைத்தவர் கடவுள். அவர் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர். நாங்கள் தினமும் கடவுளை வணங்குவோம்; அவர் அருள் பெறுவோம்.



திருச்சிற்றம்பலம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

# விநாயகர்

விநாயகரை வணங்குவோம்
நற்கருமங்கள் ஆற்றுவோம்



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

# முருகன்



விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

- கந்தரலங்காரம் -



3. S.P.C. - 070350

# உமாதேவியார்

சிவபெருமானின் சக்தி உமாதேவியார். அவர்தான் உலகத்தின் சக்தி ஆவார். உமாதேவியாருக்குப் பல பெயர்கள் உண்டு. அவரை எல்லோரும் வணங்குகின்றார்கள். நாங்களும் உமாதேவியாரை வணங்குவோம்.



தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே.

# எமது பெற்றோர்



எங்களைப் பெற்று வளர்ப்பவர்கள் பெற்றோர்கள். அவர்கள் எங்களை அன்புடன் வளர்க்கிறார்கள். உண்ண உணவு தருகிறார்கள். அணிய உடை தருகிறார்கள். கல்வி கற்கப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். நோய் வந்த காலத்தில் பராமரிக்கிறார்கள். நல்ல பண்புகளை அனுசரிக்க வழிகாட்டுகிறார்கள். எங்கள் நலனில் அக்கறை காட்டுகிறார்கள்.

பெற்றோரைத் தினமும் வணங்குவோம். அவர்களை மதிப்போம். அவர்கள் சொற்படி நடப்போம். வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவுவோம். அவர்களுக்கு உரிய பணிவிடைகள் செய்வோம்.

# ஆலய வழிபாடு



இறைவன் எழுந்தருளி, அருள்பாலிக்கும் இடம் ஆலயம். நாம் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட வேண்டும். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.

ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்?
நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து பூசைப் பொருள்களுடன் செல்ல வேண்டும். அங்கே தோத்திரப் பாடல்கள் பாடி வழிபட வேண்டும்.

**ஆலயம் செல்வோம்; இறைவனை வணங்குவோம்.**

# காலைப் பிரார்த்தனை



பாடசாலை ஆரம்பமாகும் பொழுது பிரார்த்தனை தினந்தோறும் நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் பிரார்த்தனை மண்டபத்தில் ஒன்று கூடுவர். எல்லோரும் பாதணிகளைக் கழற்றுவர். புனிதமாக விபூதி தரித்து, பஞ்சபுராணங்களைப்பாடி வழிபடுவர்.

இவ்வாறு எல்லோரும் ஒன்றுகூடி இறைவனை வழிபடுவதால் மன ஒருமைப்பாடும், அமைதியும் ஏற்படும். இறையருள் கிடைக்கும். மாணவரிடையே ஒழுக்கம், ஒற்றுமை, கூட்டுறவு வளரும். பிரார்த்தனையின் பின் அனைவரும் ஒழுங்காக வகுப்பறைக்குச் செல்வர். பாடங்களை ஆர்வத்துடன் கற்பர்.

**பிரார்த்தனை நம் வாழ்வை வழிப்படுத்தும்.**

பாடம் -5

# தீட்சை பெறுவோம்



சைவப் பிள்ளைகள் எல்லோரும் சிறுவயதில் தீட்சை பெறுதல் வேண்டும். தீட்சையைத் தகுந்த குருவிடம் பெறுதல் வேண்டும். தீட்சைக்குரிய மந்திரங்களை குரு உபதேசிப்பார். பிள்ளைகள் சீடர்களாக அமர்ந்து பணிவுடனும் அவதானத்துடனும் மந்திரத்தைச் செவிமடுப்பார்கள். மந்திரங்களை முறைப்படி உச்சரித்து, விபூதி பூசி, பிற அனுட்டானங்களை மேற்கொள்வார்கள். சைவர்களுக்குத் தீட்சை பெறுதல் ஒரு சடங்கு ஆகும்.

தீட்சை பெறுவதால் பல நன்மைகளைப் பெறலாம். இறை நம்பிக்கை அதிகரிக்கும். மனதிலிருந்து பயம் நீங்கிவிடும். மனதில் உறுதி ஏற்படும். சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வாழலாம். இறையருள் கிடைக்கும்.

**நாங்கள் தீட்சை பெறுவோம்.**

பாடம் - 6

# சுவாமி அறை



நாம் தினமும் இறைவனை வணங்குதல் வேண்டும். இறைவனை வீட்டில் வழிபட அமைக்கும் இடமே சுவாமி அறையாகும். இது அமைதியாகவும் புனிதமாகவும் இருக்க வேண்டும். சுவாமி அறை மாடத்தில் சுவாமிப் படங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

சுவாமி அறையில் தினசரி காலையிலும், மாலையிலும் விளக்கு ஏற்றுவோம்; பூக்களைச் சுவாமிக்குச் சாற்றுவோம்; தூபம் இடுவோம். தீபம் காட்டுவோம். 'சிவசிவ' என்று கூறித் திருநீறு அணிவோம். சுவாமி அறையில் எல்லோரும் கூடுவோம். இறைவனை வணங்குவோம்.

**இறைவனை வணங்கி அருள் பெறுவோம்.**

# பொல்லாப் பிள்ளையார்



திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் ஆலயம் உண்டு. அந்த ஆலயத்தின் பூசகரின் மகன் பெயர் நம்பி. நம்பி இறைவனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர்.

ஒருநாள் நம்பியின் தந்தையார் அயலூர் சென்றார். அதனால் அன்று பூசை செய்வதற்கு நம்பி கோயிலுக்குச் சென்றார். தந்தையார் போலவே பூசையைச் செய்தார். பூசைக்கு

வைத்த நைவேத்தியம் அப்படியே இருந்தது. தந்தையார் பூசைக்கு வைக்கும் நைவேத்தியத்தை வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை. இதனால் பிள்ளையார்தான் உண்கிறார் என்று நம்பி எண்ணினார். தனது பூசையில் ஏதோ குறை உள்ளது; அதனால்தான் பிள்ளையார் உண்ணவில்லை என்று நம்பி நினைத்தார். உடனே தனது தலையைக் கல்லிலே மோதினார். அப்பொழுது "நம்பி பொறு, பொறு" என்னும் அசரீரி கேட்டது.

பிள்ளையார் தனது தும்பிக்கையினால் நைவேத்தியம் முழுவதையும் எடுத்து உண்டார்.

இச்செய்தி ஊரெங்கும் பரவியது. இராஜஇராஜசோழனுக்கும் எட்டியது. பொல்லாப்பிள்ளையாரின் அனுக்கிரகம் பெற்ற நம்பியே 'நம்பியாண்டார்நம்பி' என்று அழைக்கப்பட்டார் இவரே திருமுறைகளைத் தொகுத்தவர் ஆவார்.

**தூய மனதுடன் இறைவனை வணங்குவோம்.**



4. S.P.C. - 070350

# சூரசங்காரம்



சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகிய மூவரும் அசுரர்கள். இவர்கள் தவமிருந்து பல அரிய வரங்களைப் பெற்றவர்கள்.

இவர்கள் இந்திரன் முதலான தேவர்களைத் துன்புறுத்தினர். இவர்களது கொடுமைகள் நாளுக்குநாள் அதிகரித்தன. அசுரர்களது கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

அசுரர்களின் ஆணவத்தை அடக்கவும், தேவர்களின் துன்பங்களை நீக்கவும் இறைவன் திருவுளம் கொண்டார்

சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறிகள் தோன்றின. அவை சரவணப் பொய்கையில் விழுந்தன. அத்தீப்பொறிகள் ஆறு குழந்தைகள் ஆயின. முருகன் சரவணப் பொய்கையில் தோன்றினார். இதனால் 'சரவணபவன்' என்னும் பெயர் பெற்றார்.

முருகன் இக்கொடிய அசுரர்களின் சக்தியையும், ஆணவத்தையும் தனது வேலாயுதத்தால் அழித்தார் சூரபன்மன் சேவலும் மயிலுமாக மாறி முருகனைச் சரணடைந்தான்.


சூரனை அழித்த நிகழ்ச்சியே 'சூரசங்காரம்' எனப்படும். இத்தினம் 'கந்தசஷ்டி' விரதமாகக் கொண்டாடப்படுகிறது. கந்தசஷ்டி விரதம் சைவர்களால் ஆறு தினங்கள் அனுட்டிக்கப்படும். ஆறாம் நாள் சூரசங்காரம் இடம் பெறும்.

முருகனுக்குக் கார்த்திகேயன், சரவணபவன், குமரன், ஆறுமுகன் என்னும் பல பெயர்கள் உண்டு.

(5) கந்தன்

**முருகனை வழிபட்டு வரங்கள் பெறுவோம்.**

# நிறைகுடம்



சைவசமயத்தவர் மங்கள நாட்களிலும், விசேட தினங்களிலும் நிறைகுடம் வைப்பர். நிறைகுடம் மங்களகரமானது.

**நிறைகுடம் வைப்பதற்கு வேண்டிய பொருட்கள்.**

தலை வாழைஇலை, செம்பு அல்லது சிறியகுடம், தேங்காய், மாவிலை, நெல், நீர், குத்துவிளக்கு, மஞ்சள்மா அல்லது சாணம், அறுகம்புல், வெற்றிலை, பாக்கு, பழம், திரி, விபூதி, சந்தனம், குங்குமம், தேங்காய் எண்ணெய், பூமாலை, பூக்கள் என்பனவாகும்.

**விசேட தினங்களில் வீட்டில் நிறைகுடம் வைப்போம்.**

# செங்கட்டிகள் பொன்கட்டிகளாயின



சுந்தரமூர்த்தி நாயனார்

சுந்தரமூர்த்தி நாயனார், மனைவி பரவையாருடன் திருவாரூரில் வாழ்ந்து வந்தார். ஒருமுறை பங்குனி உத்தரத் திருநாள் வந்தது. அதற்குச் செலவு செய்ய பரவையாருக்குப் பொன் தேவைப்பட்டது. இதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் அறிந்தார். ஆனால் தன்னிடம் பொன் இல்லையே என்று மனம் வருந்தினார். எனவே அவர் திருப்புகலூர்க் கோயிலுக்குச் சென்றார். இறைவனை வணங்கினார். பின்னர் அங்கிருந்த மடத்தில் களைப்பாற

எண்ணினார். சில செங்கட்டிகளைத் தலையணையாக வைத்துப் படுத்தார். சிறிது நேரம் உறங்கினார்.

நித்திரை விட்டு எழுந்தார். என்ன ஆச்சரியம்! தலையணையாக வைத்திருந்த செங்கட்டிகள் பொன்கட்டி களாக மாறியிருந்தன. அவர் பேரானந்தம் அடைந்தார். இறைவனின் கருணையை அறிந்து வணங்கினார். பொன் கட்டிகளை எடுத்துச் சென்று பரவையாரிடம் கொடுத்தார். பங்குனி உத்தரநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

## தேவாரம்


திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே.

திருச்சிற்றம்பலம்

-சுந்தரர்-

# கூட்டுப் பிரார்த்தனை



நாம் அனைவரும் சேர்ந்து பாடி இறைவனை வழிபடுவோம். சேர்ந்து பாடும் போது இறைஉணர்வு ஏற்படுகிறது. இறைவனின் அருளும் கிடைக்கிறது. இறைவனிடம் நாம் கொள்ளும் தொடர்பே பிரார்த்தனை ஆகும்.

கூட்டுப் பிரார்த்தனை எங்கே நடைபெறும்?

வீட்டில் நடைபெறும்.

கோயிலில் நடைபெறும்.

பாடசாலையில் நடைபெறும்.

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

கண்காள் காண்மின்களோ – கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

# திருநீற்றின் மகிமை



## திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் இறைவன் அருளால் பல அற்புதங்களைச் செய்தார். ஒருமுறை பாண்டியநாட்டுச் சிவதலங்களைத் தரிசிக்கச் சென்றார்.

அந்நாட்டு மன்னன் சமண சமயத்தைச் சேர்ந்தவர். சம்பந்தர் வருகையை அறிந்த சமணர்கள் அவருக்குத் தீங்கு செய்யத் திட்டமிட்டனர். அவர் தங்கியிருந்த குடிசைக்குத் தீ வைத்தனர். இறைவன் அருளால் சம்பந்தர் உயிர் தப்பினார். அந்தத் தீயானது பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயாக மாறியது. பெரும் துன்பத்தை உண்டாக்கியது.

மன்னனின் நோயைத் தீர்க்க சமணர்கள் எவ்வளவு முயன்றும் நோய் குணமாகவில்லை. பாண்டிய மன்னனின் மனைவியின் பெயர் மங்கையற்கரசி. இவர் சைவசமயத்தைச் சார்ந்தவர். சம்பந்தரிடம் சென்று மன்னன் படும் துன்பத்தை எடுத்துக் கூறினார்.

உடனே சம்பந்தர் பாண்டிய மன்னனிடம் சென்றார். உடலெங்கும் திருநீற்றைப் பூசினார். "மந்திரமாவது நீறு" என்னும் பதிகத்தைப் பாடினார். மன்னனின் நோய் குணமாகியது. அதன் பின் அவர் சைவசமயத்தை பின்பற்றினார். பல கோயில்களைக் கட்டுவித்தார்.

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திரு ஆல வாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

# திருக்கோணேச்சரம்



இலங்கையின் கிழக்குக் கரையில் திருக்கோணமலை உள்ளது. அதன் கடற்கரையில் உயர்ந்து நிற்கிறது கோணமாமலை. அதன் மூன்று பக்கங்களையும் நீலக்கடல் சூழ்ந்துள்ளது.

திருக்கோணேச்சர ஆலயம் கோணமாமலையில் அமைந்திருக்கிறது. இது பழமையும் பெருமையும் வாய்ந்த சிவன் கோயிலாகும். இத்தலத்தின் மீது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி உள்ளார்.

இங்கு எழுந்தருளி இருக்கும் இறைவன் கோணேசுவரர், இறைவி மாதுமையாள். இங்கு புனித தீர்த்தம் உண்டு, அதன் பெயர் பாவநாசத் தீர்த்தம் ஆகும். இத் தீர்த்தத்தில் அடியார்கள் நீராடி அருள் பெறுவர்.

நாமும் திருக்கோணேச்சர இறைவனை வணங்கி அருள் பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம் பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கன மணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

# சரஸ்வதி பூசை



பாடசாலைகளில் நவராத்திரி விழா கொண்டாடப்படுவது வழக்கம். முதல் மூன்று நாட்களும் வீரத்தை வேண்டித் துர்க்கையை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டித் திருமகளை வழிபடுவர். இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளை வழிபடுவர். பத்தாவது நாளன்று 'விஜயதசமி விழா'

நடைபெறும். சரஸ்வதி பூசையை வெகு விமரிசையாக எல்லா மாணவர்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவார்கள்.

நவராத்திரி பூசை நடைபெறும் மண்டபத்தைச் சுத்த மாக்குவர். கோலம் போட்டு, மாலை, தோரணங்கள் போன்றவற்றால் அலங்கரிப்பர். துர்க்கை, திருமகள், கலைமகள் ஆகிய மூன்று சக்திகளின் படங்களையும் வைப்பர்.. இப்படங்களுக்கு அலங்காரம் செய்வர். மாணவர்கள் அனைவரும் வகுப்பாசிரியர்களுடைய உதவியோடு தயாரித்த நிவேதனப் பொருட்களையும் பழங்களையும் படைப்பார்கள். பின் நவராத்திரி தோத்திரங்களைப் பாடிப் பூசை செய்வார்கள். பூசை நிறைவுற்றதும் நிவேதனப் பொருட்களைப் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்.

**- சரஸ்வதி அந்தாதி -**

# கண்ணன் எங்கள் கண்ணனாம்



கண்ணன் குழந்தை வடிவினன். உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தையும் காப்பவன். கண்ணனை திருமால் எனவும் விஷ்ணு எனவும் அழைப்பர்.

'யமுனை' என்பது இந்தியாவிலுள்ள ஒரு நதி. அதில் சிலபகுதிகள் மிக ஆழமானவை. அதில் காளியன் என்னும் நச்சுப் பாம்பு இருந்தது. அது மிகவும் பொல்லாதது. நதிக்கு வரும் மனிதர்களுக்கும், பிற உயிரினங்களுக்கும்

தொல்லை கொடுத்தது. அதன் நஞ்சினால் பக்கத்திலுள்ள மரங்கள் வாடின. புல்பூண்டு முதலியன கருகின.

கண்ணபிரான் இதனைக் கண்டார். அவர் எமது காத்தல் கடவுள் அல்லவா? வாடிப் போன கடம்ப மரத்தில் ஏறினார் நதியின் மேல் உள்ள கிளைக்கு வந்தார்.

காளியனின் வாலைப் பிடித்து இழுத்தார். காளியனுக்குக் கோபம் வந்தது. ஐந்து தலைகளையும் உயர்த்திப் படம் எடுத்தது. கண்ணன் காளியனின் தலையில் குதித்தார். நடனமாடினார். காளியனின் தலை சுற்றியது.

காளியனின் தலைகளில் இருந்த இரத்தினங்கள் சிதறி விழுந்தன. அதன் வலிமை ஒடுங்கியது. காளியன் தன்னைக் காப்பாற்றும்படி கண்ணனை வேண்டியது. அன்றிலிருந்து காளியனின் தொல்லை நீங்கியது. கண்ணனை எல்லோரும் போற்றி வழிபட்டனர். நாமும் கண்ணனை வழிபடுவோம்.

**கண்ணனைப் போற்றி வழிபடுவோம்.**

# திருநாவுக்கரசர்



## திருநாவுக்கரசு நாயனார்

திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருணீக்கியார். இவர் சிறுவயதில் பெற்றோரை இழந்தார். தமக்கை திலகவதி யாரின் அரவணைப்பில் வாழ்ந்தார். கல்வியில் சிறந்து விளங்கினார். சைவசமயம் பற்றிய உண்மையை அறியாமை யால், சமண சமயத்தில் சேர்ந்தார். தருமசேனர் என்ற பெயருடன் வாழ்ந்தார். தனது தமக்கையையும் மறந்தார்.

இதனைக் கண்டு திலகவதியார் வருந்தினார். வீரட்டானேச்சுரர் கோயிலுக்குச் சென்றார். இறைவனிடம் முறையிட்டு அழுதார். சிவபெருமான் திலகவதியாரின் கனவில் தோன்றி "சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம்" என அருளினார்.

தருமசேனர் சூலை நோயினால் வருந்தினார். சமணர்கள் செய்த வைத்தியம் பயனளிக்கவில்லை. நோய் அதிகமாகியது. ஒருவருக்கும் தெரியாமல் தனது சகோதரியிடம் சென்று மனம் வருந்தி அழுதார்.

திலகவதியார் வீரட்டானேச்சுரர் கோயிலுக்கு அவரை அழைத்துச் சென்றார். விபூதியைப் பூசினார். இறைவனை வணங்கும்படி கூறினார். அவரும் இறைவனை வணங்கினார். இறையருளால் பாடும் திறனைப் பெற்றார். "கூற்றாயின வாறு" என்னும் பதிகத்தைப் பாடினார். சூலை நோய் நீங்கியது. அன்று முதல் அவர் சிவனடியார் ஆனார். இறைவனால் 'நாவுக்கரசர்' என அழைக்கப்பட்டார்.

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே

**திருச்சிற்றம்பலம்**

# சைவசமயப் பண்பாட்டுக் கருமங்கள்

## தோரணம் கட்டுவோம்

தோரணம், ஒரு நிகழ்வை வெளிப்படுத்தும் அடையாளமாகும். தென்னங்குருத்தோலையினால் செய்து கட்டுவர். தோரணத்துடன் மாவிலையையும் தொங்கவிடுவர்.

### மங்கள தோரணம்



சமய விழாக்களின்போது தோரணங்கள் கட்டுவர். இது "மங்கள தோரணம்" எனப்படும். மங்கள தோரணத்தில் நான்கு குருவிகள் இருக்க வேண்டும். குருவியின் தலை மேல்நோக்கியும், வால் கீழ்நோக்கியும் இருக்க வேண்டும்.

கண்ணாடித் தோரணம், கொத்துத் தோரணம் என்பவை சிறப்பான தோரணங்களாகும்.

### அமங்கள தோரணம்

அமங்கள வைபவங்களிலும் தோரணம் கட்டுவது வழக்கம். இது அமங்கள தோரணம் எனப்படும் இதில் மூன்று குருவிகள் இருக்கும். குருவியின் தலை கீழ்நோக்கியும், வால் மேல்நோக்கியும் இருக்கும்.



**நாங்களும் தோரணம் செய்து கட்டுவோம்.**

## கோலம் போடுவோம்



கோலம் என்பது அழகு, ஒழுங்கு எனப்படும். கோலம் போடுவதால் வீட்டில் அழகு ஏற்படும். எமது உள்ளங்களிலும் மகிழ்ச்சி உண்டாகும். விசேட தினங்களில் வீட்டில் கோலம் போடுவோம். வீட்டை அழகுபடுத்துவோம்.


## நிறைகுடம் வைப்போம்




நிறைவு என்பது முழுமை அல்லது பூரணம் எனப்படும். நிறைகுடம் என்பதைப் பூரண கும்பம் எனவும் அழைக்கலாம். நிறைகுடம் வைப்பதால் வீடு மங்களகரமாகக் காட்சி தரும். எமது உள்ளங்களிலும் நிறைவு ஏற்படும். விசேட தினங்களில் வீட்டில் நிறைகுடம் வைப்போம்.

## பூமாலை கட்டுவோம்

பூ என்றால் மலர்ச்சி, பொலிவு எனப்படும். பூவை, மலர் என்றும் கூறலாம். பூக்களைக் கோர்வையாகக் கட்டுவது பூமாலை எனப்படும். பூமாலையை வாழை நார் கொண்டு கட்டுவர். பூமாலை அழகு நிறைந்தது, பொலிவானது, மங்களகரமானது. இறைவனை மாலை சாத்தி வழிபடுவோம்.




## தீபம் ஏற்றுவோம்



தீபம் என்பது ஒளி எனப்படும். ஒளி பிரகாசமானது. தீபம் ஏற்றுவதால் வீட்டில் ஒளி பிறக்கும். எமது உள்ளங்களிலும் ஒளி பிரகாசிக்கும். ஒளி இறைவனைக் குறிக்கும். தெளிவைத் தரும். காலையும் மாலையும் சுவாமி அறையில் தீபம் ஏற்றுவோம்.

**தூய்மை மேன்மை தரும்.**

# கூடி வாழுதல்.



சித்தூர் ஓர் அழகிய கிராமம். அங்கு வாழ்ந்த மக்கள் தமக்குள் பகைத்துக் கொண்டனர். அயல் கிராமத்தில் சிங்கன் என்ற முரடன் வாழ்ந்து வந்தான். அவன் சித்தூருக்கு வந்து மக்களை அடித்துத் துன்புறுத்துவான். அவர்களிடம் இருந்து பணம் மற்றும் பொருட்களைப் பறித்துச் செல்வான்.

அவ்வூர் மக்கள் இவனது கொடுமைகளை எண்ணி வருந்தினர். இவ்வேளையில் அக் கிராமத்துக்கு ஒரு பெரியவர் வந்தார். கோயிற் திருவிழாவின்போது அவர் உரை நிகழ்த்தினார்.

"இக் கிராமத்தில் வாழும் அனைவரும் ஒன்றுகூடுங்கள்; ஒற்றுமையாக வாழுங்கள்; ஒற்றுமையாக இருந்தால் உங்களை யாரும் வெல்ல முடியாது; ஒற்றுமையே பலம்" என்று பேசினார்.

அப்போது தான் மக்கள் தங்கள் தவறுகளை உணர்ந்தனர். அதன் பின்னர் ஒன்றுகூடி வாழ்ந்தனர்.

சிங்கன் மீண்டும் ஒருநாள் ஊருக்குள் வந்தான். எல்லோரும் அவனைப் பிடித்து கட்டி வைத்தனர். சிங்கன் "என்னை விட்டுவிடுங்கள். இனிமேல் நான் எவருக்கும் தீங்கு செய்யமாட்டேன்" என்று கெஞ்சினான். இரக்கம் கொண்ட மக்கள் அவனை விடுதலை செய்தனர்.

தனி ஒருவனாக இருக்கும்போது பல கஷ்டங்கள் ஏற்படும். எதையும் செய்வது கடினம். ஆனால் கூடி வாழும்போது பகைவனும் நெருங்க முடியாது என்பதை மக்கள் உணர்ந்தனர்.

**"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டு"**

# பொறுமையைக் கடைப்பிடித்தல்.



பல வருடங்களுக்கு முன் ஒரு நாட்டில் பஞ்சம் உண்டானது. மக்கள் எல்லோரும் பட்டினியால் வாடினார்கள். பிரபு ஒருவர் அங்குள்ள சிறு பிள்ளைகளின் மேல் இரக்கம் கொண்டார். அவர்களை வீட்டுக்கு அழைத்தார். அவர்களுக்கு ஒவ்வொரு மோதகம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். சேவகர்கள் ஒரு கூடையில் மோதகங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள். "பஞ்சம் முடியும் வரை இங்கே வாருங்கள். நான் உங்களுக்கு மோதகம் தருவேன்" என்றார்.

பிள்ளைகள் ஒருவருடன் ஒருவர் இடிபட்டுப் பெரிய மோதகங்களை எடுத்துக் கொண்டு ஓடினார்கள். பிரபுவிற்கு நன்றி சொல்லவில்லை. கிரிசாம்பாள் என்னும் சிறுமி தனியே நின்றாள். மீதியாக இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு பிரபுவுக்கு நன்றி கூறிச் சென்றாள்.

பிரபுவிற்கு அவள் மேல் இரக்கம் உண்டாயிற்று. ஒவ்வொரு நாளும் சிறுவர்கள் மோதகங்களை எடுத்துக் கொண்டு போனார்கள்.

ஒருநாள் வழக்கம் போல் கிரிசாம்பாளிற்கு சிறிய மோதகம் கிடைத்தது. அதை அவள் தாயிடம் கொடுத்தாள். தாய் அதைப் பிரித்தபோது அதற்குள் இருந்து ஒரு பொற்காசு விழுந்தது. கிரிசாம்பாள் அதை பிரபுவிடம் கொண்டு சென்றாள். பிரபு அதனை வாங்கிப் பார்த்து "மகளே நான் இப்பணத்தை உனது பொறுமைக்குப் பரிசாகக் கொடுத்தேன். நீயே அதை வைத்திரு" என்றார். கிரிசாம்பாள் அப் பணத்தைத் தாயிடம் கொண்டு வந்து கொடுத்தாள்.

**"பொறுமை விலைமதிப்பற்றது"**

பாடம் – 20

# முதலை வாய்ப்பிள்ளையை மீட்டகதை



சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். கோயிலுக்குச் சென்று அவரை வணங்கித் தேவாரம் பாடுவார் இவ்வாறு பல கோயில்களுக்குச் சென்று வணங்கி வரும்போது ஒரு வீட்டில் அழுகைக்குரல் கேட்டது. எதிர் வீட்டில் மங்கல ஒலி கேட்டது. நாயனார் அவ்விடத்தில் நின்று யோசித்தார். அழுகை ஒலி கேட்ட

வீட்டுக்குச் சென்றார். "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"எனது மகனும், எதிர் வீட்டுப்பிள்ளையும் ஒரே வயதையுடையவர்கள். இருவரும் நண்பர்கள். குளத்திற்குக் குளிக்கச் சென்றார்கள். எனது மகனை முதலை விழுங்கி விட்டது. எதிர் வீட்டுப் பிள்ளைக்கு இன்று பூநூற் சடங்கு நடைபெறுகிறது. எனது பிள்ளையை நினைத்து அழுகின்றேன்" என்றாள் தாய்.

உடனே சுவாமிகள் குளக்கரைக்குச் சென்றார். சிவபெருமானை வேண்டித் தேவாரம் பாடினார். பாடி முடிந்ததும் குளத்திற்குள் இருந்து முதலை வெளியே வந்தது. பிள்ளையை வாயிலிருந்து உமிழ்ந்தது. பிள்ளை உயிருடன் மீண்டது.

பெற்றோர் சுவாமிகளின் அற்புதத்தைக் கண்டு வியந்து வணங்கினார்கள்.

**"இறைவனை நம்பினோர் கைவிடப்படார்"**

# ஆலயத் தொண்டுகள்

இறைவன் எம்மைப் படைத்துக் காப்பவன். இறைவன் எழுந்தருளி இருக்கும் இடம் ஆலயம். ஆலயத்தில் தொண்டுகள் செய்வது எமது கடமை. ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் சரியைத் தொண்டுகள் எனப்படும்.

## சரியைத் தொண்டு செய்வோம்



திருக்கோயிலைச் சுத்தம் செய்வோம். கோயில் வீதிகளிலுள்ள புல்பூண்டுகளை அகற்றுவோம். உள்வீதிகளைக் கூட்டுவோம். மண்டபங்களைக் கழுவுவோம். பூசை அபிடேகத்துக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொடுப்போம்.



நந்தவனம் அமைப்போம். பூசைக்குத் தேவையான பூங் கன்றுகளை நாட்டுவோம். நீர் ஊற்றுவோம். பசளை இடுவோம். பூக்கள் கொய்து மாலை கட்டிச் சுவாமிக்குச் சாத்துவோம். கோயிற் பாத்திரங்களைத் துலக்குவோம்.



தீபம் அணையாது எண்ணெய் ஊற்றுவோம். சுவாமி வீதி வலம் வரும் போது கொடி, குடை, ஆலவட்டம் பிடிப்போம். தோத்திரம் பாடுவோம். பஜனை செய்வோம்.

**"பக்திக்கு அடுத்தது பரிசுத்தம்"**

# மகிழ்ச்சியாக வாழ்வோம்.

எம்மைப் படைத்துக் காப்பவர் இறைவன். எமக்கு வழிகாட்டியாக இருப்பவரும் அவரே. ஒரு வண்டியைச் செலுத்துபவன் சாரதி. அதுபோல நாம் நல்ல வழிகளில் செல்ல இறைவன் வழிகாட்டுகிறார்.

இறைவனை நாம் கண்களால் காணமுடியாது. அதனால் நாம் இறைவன் இல்லையென்று கூற முடியாது. எமது உயிரை நாம் கண்களால் கண்டதுண்டா? இல்லையே. எனவே "நாம் உயிரில்லாதவர்கள் என்று கூறலாமா"?

உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் அனைத்திலும் இறைவன் இருக்கிறார். நாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் இறைவன் அவதானிக்கிறார். இதை நாம் உணர வேண்டும். நாம் நன்மை செய்தால் எமக்கு நன்மையே உண்டாகும். தீமை செய்தால் தீமையே உண்டாகும். எனவே நாம் நன்மையே செய்வோம்.

நாம் ஏழைகளுக்கு உதவ வேண்டும். மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். பலனை எதிர்பாராது நல்ல கருமங்களைச் செய்தல் வேண்டும்.

மாதா, பிதா, குரு முதலானோரை மதித்து வணங்குதல் வேண்டும். அயலவர்களை நேசித்தல் வேண்டும். உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல் வேண்டும்.

நாம் நல்ல பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடிக்கும் போது நற்பண்புகள் எம்மிடையே வளரும். எமது சமயப் பெரியவர்களை மதிப்பது போல், ஏனைய சமயப் பெரியார்களையும் மதித்தல் வேண்டும். ஏனைய சமயத்தவரின் சமயச் சின்னங்கள், வழிபாட்டிடங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் அவர்களின் கலாசார நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதலும் நன்று. நாம் எல்லோருடனும் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வோமானால் எமது வாழ்வு மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும்.

**நன்மை செய்து நற்பயனைப் பெறுவோம்.**

# ஔவையார் அருளிய மூதுரை

(வாக்குண்டாம்)

காப்பு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக் கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

நூல்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.


1250
150
1400

1250
150
1400

சபுராணம் - தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்
திருப்புராணம்

| நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்கவும். | | | |
|---|---|---|---|
| பாடசாலையின் பெயர்:-........................................ | | | |
| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
| 2008 | ........................ | ........ | ........ |
| 2009 | ........................ | ........ | ........ |
| 2010 | ........................ | ........ | ........ |
| 2011 | ........................ | ........ | ........ |
| 2012 | ........................ | ........ | ........ |

முருகன் - ஆறுமுகன், கந்தன், சரவணப் பவன், வேலன், குமரன், கார்த்திகேயன், வடிவேலன்
பிள்ளையார் - விநாயகர், கணபதி, ஆனைமுகன், ஐங்கரன், விக்னேஸ்வரர்
துர்க்கை - அம்மன், காளி, அம்பிகை,
உமாதேவியார் - உலகமாதா, நாகம்மா, அபிராமி
அம்மன்.



1250
150
250

හින්දු ධර්මය (දෙමළ) 3

07FT03 -